ஜுலை 15-21

**பாடம் 4**

# விசுவாசத்தினால் மாத்திரம் நீதிமானாக்கப்படுதல்



**மனன வசனம்**

**கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறைப் பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். கலா 2:20.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 2:15-21;**

**எபே 2:12;**

**பிலி 3:9;**

**ரோமர் 3:10-20;**

**ஆதி 15:5,6;**

**ரோமர் 3:8.**

ஜுலை 15 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

இதுவரை தான் அறிக்கையிட்டு வந்த விசுவாசத்திற்கு முரணாக அந்தியோகியாவில் பேதுரு நடந்துகொண்டார்; அதனால், பவுல் எல்லாருக்கும் முன்பாக பேதுருவை எதிர்த்துக் கேள்விகேட்டார். முன்பு அஞ்ஞானிகளாக இருந்த புற ஜாதியாரோடு சேர்ந்து இனிச் சாப்பிடுதில்லையென பேதுரு தீர்மானித்தது, அவர்களை இரண்டாந்தரக் கிறிஸ்தவர்கள்போல் காட்டியது. 'புறஜாதியார் தேவனுடைய குடும்பத்தில் இணைந்து, யூதரோடு சரிசமமாக உட்கார்ந்து, உண்டுமகிழ வேண்டுமானால், முதலில் அவர்கள் விருத்தசேதனம் எனும் சடங்கை நிறைவேற்றவேண்டும்' என்பதுபோல் பேதுருவின் நடவடிக்கை இருந்தது.

பதற்றமான அந்தச் சூழ்நிலையில், உண்மையில் பேதுருவிடம் பவுல் கேட்ட கேள்வி என்ன? அதுபற்றிச் சுருக்கமாக இந்த வாரத்தில் படிக்கப்போகிறோம். கலா 2:15-21 இல் மிகவும் இரத்தினச் சுருக்கமாகப் பல சொற்களும் சொற்றொடர்களும் முதன்முறையாக அறிமுகமாகின்றன; இவை நற்செய்தியையும், நிருபத்தின் மற்ற அதிகாரங்களையும் விளங்கிக்கொள்ள அடித்தளம் அமைக்கின்றன. 'நீதிமானாக்கப்படுதல், நீதி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகள், நம்பிக்கை,விசுவாசம், இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம்' போன்ற வார்த்தைகள் மிக முக்கியமானவை.

இந்த வார்த்தைகளின்மூலம் பவுல் சொல்ல விரும்புவது என்ன? இரட்சிப்பின் திட்டம்பற்றி அவை என்ன போதிக்கின்றன?

2017, ஜுலை 22 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## நீதிமானாக்கப்படுதல் (கலா 2:15,16)

**'புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும்' என்று சொல்கிறார் பவுல். கலா 2:15. பவுல் சொல்லவரும் கருத்து என்ன?**

பவுல் ஏன் இவ்வாறு எழுதுகிறாரென்று அறிந்துகொள்வது முக்கியம். கிறிஸ்தவர்களான சக யூதர்களும் தன் கருத்தை ஏற்றுக்கொள்வதையே அவர் விரும்பினார். எனவே, அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில், புறஜாதியாருக்கும் யூதருக்கும் இடையேயிருந்த வேறுபாட்டைச் சுட்டிக்காட்டி ஆரம்பிக்கிறார். தேவன் தெரிந்துகொண்ட ஜனங்கள் யூதர்கள்; அவருடைய பிரமாணம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; அவரோடான உடன்படிக்கை உறவின் பயன்களையும் பெற்றிருந்தார்கள். ஆனால், புஜாதியாரோ பாவிகளாகக் கருதப்பட்டார்கள்; அவர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை; வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியராய் இருந்தார்கள். எபே 2:12; ரோமர் 2:14. யூதக்கிறிஸ்தவர்களுக்கும் பவுல் ஓர் எச்சரிப்பைக் கொடுக்கிறார். வச 16. அதாவது, 'ஆவிக்குரிய இந்த அனுகூலங்கள் தேவனுக்குமுன் ஒருவனையும் நீதிமானாக்காது. ஏனெனில், 'நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் ஒருவனும் நீதிமானாக்கப்படுவதில்லை' என்கிறார்.

**கலா 2:15-17 இல், 'நீதிமானாக்கப்படுதல்' எனும் வார்த்தையை நான்குமுறை பவுல் பயன்படுத்துகிறார். இதன் அர்த்தம் என்ன? யாத் 23:7; உபா 25:1.**

'நீதிமானாக்கு' எனும் வினைச்சொல் பவுலுக்கு மிகமுக்கியமான சொல் போலும். புதிய ஏற்பாட்டில் மொத்தம் 39முறை இந்த வார்த்தை பயன்பட்டுள்ளது. அதில், 21 முறை பவுலின் நிருபங்களில்தான் காணப்படுகிறது. கலாத்தியர் நிருபத்தில் எட்டுமுறை வருகிற இந்த வார்த்தையானது, கலா 2:15-17 இல் மாத்திரம் 4 முறை வருகிறது. நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் சட்டரீதியான ஒரு வார்த்தைதான் 'நீதிமானாக்கப்படுதல்.' குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் அந்தக் குற்றத்தைச் செய்யவில்லையென நீதிபதி தீர்ப்பளிக்கும்போது, இந்த வார்த்தையைப் பயன்படுத்துவார். 'ஆக்கினைத்தீர்ப்பு' என்பதற்கு எதிர்ப்பதம் இது. 'நீதிமானாக்கப்படுதல்,' 'நீதி' ஆகிய வார்த்தைகளுக்கான கிரேக்க வார்த்தைகள், ஒரே மூல வார்த்தையிலிருந்து உருவானவைதான். எனவே, நீதிமானாக்கப்படும் ஒருவர் தன் குற்றங்களிலிருந்து மன்னிப்புபெறுகிறார்; அதோடு, நீதிமானென்று தீர்ப்பும் பெறுகிறார்.

நீதிமானாக்கப்படுதலை உறவுசம்பந்தமான ஒன்றாகவும் யூதக்கிறிஸ்தவர்கள் சிலர் கருதினார்கள். அதாவது, தேவனோடும் அவர் உடன்படிக்கையோடும் உறவு வைத்துக்கொள்வதைப்பற்றியது அது. எனவே, 'நீதிமானாக்கப்படுதல்' என்பது தேவனுடைய உடன்படிக்கையின் குடும்பமான ஆபிரகாமின் குடும்பத்தில் உள்ளவராக ஒருவர் எண்ணப்படுவதற்கு அடையாளமாயிருக்கிறது.

கலா 2:15–17 இல் பவுல் உங்களிடம் சொல்வது என்ன? உங்களுடைய கிறிஸ்தவ அனுபவத்தில் இதை எவ்வாறு அப்பியாசிக்கலாம்?

# நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்

***ஒருவன் 'நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால்' நீதிமானாக்கப்படுவதில்லையென்று, கலா 2:15,16 இல் மூன்றுமுறை பவுல் கூறுகிறார். அவர் சொல்வதின் அர்த்தத்தை அறிய கலா 2:15,16,17; 3:2,5,10; ரோமர் 3:20,28 ஆகிய வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன?***

நியாயப்பிரமாணம்பற்றி முதலில் அறிந்துகொள்ளவேண்டும். 'நாமொஸ்' எனும் வார்த்தை 121 முறை பவுலின் நிருபங்களில் வருகிறது. 'தம் மக்களுக்கு தேவன் வைத்திருந்த திட்டம், மோசேயின் முதல் ஐந்து புத்தகங்கள், பழைய ஏற்பாடு, பொது நியதி' போன்ற பல்வேறு காரியங்களை இவ்வார்த்தை சுட்டிக்காட்டலாம். ஆனால், தேவன் தம் மக்களுக்கு மோசேமூலம் கொடுத்த கட்டளையையே இந்த வசனத்தில் நியாயப்பிரமாணம் என்கிறார்.

எனவே, 'நியாயப்பிரமாணத்தின் கிரியை' என்பது மோசேயின்மூலம் தேவன் கொடுத்த ஒழுக்கப்பிரமாணங்கள், சடங்குப்பிரமாணங்கள் அனைத்தையும் கைக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகிறது. 'எவ்வளவுதான் முயற்சியெடுத்து ஒருவர் தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொண்டு, கீழ்ப்படிந்தாலும், தேவன் நம்மை நீதிமானாக எண்ணுவதற்கும் தேவனுக்குமுன் நீதியுள்ளவர்களாக நாம் எண்ணப்படுவதற்கும் அவை போதா' எனும் கருத்தை பவுல் வலியுறுத்துகிறார். ஏனெனில், 'எண்ணத்திலும் செய்கையிலும் முழுதளவு தூய்மை, அதாவது, ஒரு சில நேரம் என்றிராமல் எப்போதும் அப்படியிருத்தல். ஒரு சில கற்பனைகளுக்குக் கீழ்ப்படிதல் என்றிராமல், எல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிதல்' போன்றவற்றை தேவனுடைய பிரமாணம் கோருகிறது.

'நியாயப்பிரமாணத்தின் கிரியை' எனும் சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் இல்லை; புதிய ஏற்பாட்டிலும் பவுலின் நிருபங்களைத் தவிர வேறு எந்தப் புத்தகத்திலும் இல்லை. ஆனால், 1947 இல் சாக்கடலருகே கண்டெடுக்கப்பட்ட புத்தகச்சுருள்கள் இதன் அர்த்தத்தை விளங்கப்பண்ணுகின்றன. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த 'எசனெயர்' எழுதினவைகளின் தொகுப்புதான் அவை. அவை எபிரெய மொழியில் எழுதப்பட்டுள்ளன. அதிலிருந்த புத்தகச்சுருள் ஒன்றில் 'மிக்ஸாட் மாஸ் ஹா-டோரா' என்று தலைப்பிடப்பட்டிருந்தது. அதற்கு 'நியாயப்பிரமாணத்தின் முக்கியக்கிரியைகள்' என்று அர்த்தம். பரிசுத்தக் காரியங்களைப் பரிசுத்தமற்றவையாக்கும் செயலைத் தடைசெய்யும் பல்வேறு காரியங்கள் வேதாகமப் பிரமாணத்தை அடிப்படையாகக்கொண்டு அதில் விவரிக்கப்பட்டுள்ளன; புறஜாதியாரிடமிருந்து யூதரைப் பிரித்துக்காட்டும் காரியங்கள் பல அதில் உள்ளன. முடிவில் 'நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைக் கைக்கொண்டால், தேவனுக்கு முன் நீதிமானாக எண்ணப்படுவீர்கள்' என்று உள்ளது. அதாவது, விசுவாசத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், நடத்தையை அடிப்படையாகக் கொண்டு மனிதர் நீதியுள்ளவர்களாவதாக அது சொல்கிறது. பவுல் சொல்லும் கருத்துக்கு முரணானது இது.

நீங்கள் எவ்வளவுக்கு தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்கிறீர்கள்? அதன் அடிப்படையில், தேவனுக்குமுன் நீதிமானாக முடியுமா? ரோமர் 3:10-20. இல்லை என்றால், ஏன்? பவுல் சொல்லும் கருத்தை விளங்கிக்கொள்ள உங்கள் பதில் எவ்வாறு உதவுகிறது?

## நீதிமானாக்கப்படுவதின் அடிப்படை

*'நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிற தும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறனென்று காணப்படும்படி' பிலி 3:9.*

கிறிஸ்துவை விசுவாசிப்பது முக்கியமற்றதாக யூதக்கிறிஸ்தவர்கள் சொல்லவில்லை; அவர்களும் இயேசுவை விசுவாசித்தார்கள். ஆனால், விசுவாசம் மாத்திரம் போதாது; கீழ்ப்படிதலும் சேர்ந்துதான் நம்மை நீதிமான்களாக்க வழி செய்கிறதென்று கருதினார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையும் கிறிஸ்துவை விசுவாசிப்பதையும் பவுல் வேறுபடுத்திக் காட்டினார். 'இரண்டும் முக்கியம்' எனும் நிலையை அவர் எதிர்த்தார். நீதிமானாக்கப்படுதலின் அடிப்படை விசுவாசம் மாத்திரமே. விசுவாசம் என்பது வெறும் கருத்து அல்ல; அது இயேசுவோடு சம்பந்தமுள்ளது. கலா 2:15 இல் உள்ள 'இயேசுவைப் பற்றும் விசுவாசம்' என்பதை 'இயேசுவின் விசுவாசம்' 'இயேசுவின் நம்பகத்தன்மை' என்றும் மொழி பெயர்க்க லாம். நாம் செய்யும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கும், கிறிஸ்து தம் நம்பகத்தன்மையால் நமக்காக நிறைவேற்றியிருக்கும் கிரியைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை இது தெளிவாகக் காட்டுகிறது.

விசுவாசம் தன்னில்தானே நம்மை நீதிமானாக்க முடியாது; அது தன்னில் தானே புண்ணியம் உடையது அல்ல. கிறிஸ்துவையும் அவர் நமக்காகச் செய்துள்ள கிரியைகளையும் பற்றிக்கொள்வதற்கான ஒரு வழிதான் விசுவாசம். விசுவாசத்தின் அடிப்படையில் நாம் நீதிமானாக்கப்படுவதில்லை; இயேசு நமக்காக உண்மையோடு நடந்துகொண்டதின் அடிப்படையில்தான் நாம் நீதிமானாக்கப்படுகிறோம். இயேசுவின் நம்பகத்தன்மையை நாம் விசுவாசத்தோடு பற்றிக்கொள்ளவேண்டும்.

மனிதர் செய்யத்தவறியதை கிறிஸ்து செய்தார். அதாவது, தாம் செய்த எல்லாவற்றிலும் அவர் மாத்திரமே தேவனுக்கு உண்மையுள்ளவராக இருந்தார். நம்மில் அல்ல, கிறிஸ்து உண்மையோடு இருந்ததில்தான் நமக்கான நம்பிக்கை உள்ளது. புரொட்டடஸ்டன்ட் சீர்திருத்தத்தை முடுக்கிய முக்கியமான, மாபெரும் சத்தியங்களில் இதுவும் ஒன்று. பலநூற்றாண்டுகளுக்குமுன்பு மார்டின் லூதர் பிரசங்கித்தபோது இருந்ததுபோலவே இன்றும் இந்தச் சத்தியம் முக்கியமானதாக இருக்கிறது. கலா 2:15 இல் பவுல் சொல்லும் கருத்தை, சீரிய மொழிபெயர்ப்பு சரியாகத் தெரிவிக்கிறது. "ஆகையால், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல, இயேசுவின் விசுவாசத்தினாலே ஒருவன் நீதிமானாக்கப்படுகிறானென்பதை அறிந்திருக்கிறோம். நியாயப்பிரமானத்தின் கிரியைகளினால் அல்ல, மேசியாவாகிய அவருடைய விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்படும்படி, மேசியாவாகிய இயேசுவை விசுவாசிக்கிறோம்."

'கிறிஸ்து நமக்காக தேவனிடம் நம்பகத்தன்மையோடு நடந்துகொண்டதும், அவருக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்ததும்தான் நம் இரட்சிப்பின் அடிப்படையாக இருக்கிறது.' இந்த அற்புதச் சத்தியம்பற்றி ரோமர் 3:22,26; கலா 3:22; எபே 3:12; பிலி 3:9 சொல்வது என்ன?

விசுவாசமானது கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையென்று பவுல் உறுதியாகக் கூறுகிறார். கிறிஸ்துவுக்குள் நமக்குள்ள வாக்குத்தத்தங்களை விசுவாசத்தால்தான் நாம் பற்றிக்கொள்கிறோம். விசுவாசம் என்றால் என்ன?

***விசுவாசம் தோன்றும்விதம்பற்றி ஆதி 15;5,6; யோவான் 3;14-16; 2 கொரி 5:14,15; கலா 5:6 சொல்வது என்ன?***

தேவனுக்கு நாம் தருகிற பதில்தான் மெய்விசுவாசம். 'தேவன் கட்டளையிடுவதால், நான் விசுவாசிக்கப்போகிறேன்' என்று வாழ்க்கையில் ஏதோ ஒரு காலக் கட்டத்தில் மனிதர் தீர்மானிப்பதற்கு, அது ஓர் உணர்வு கிடையாது. மாறாக, தேவன் காட்டிய தயவை உணர்ந்த இதயத்தில் உண்டாவதே மெய்விசுவாசம். அதனால்தான், தேவன் முந்தி நமக்காகச் செய்த கிரியைகளின் நிமித்தமே, விசுவாசம் உண்டாவதாக வேதாகமம் எப்போதும் வலியுறுத்துகிறது. ஆபிரகாமின் வரலாற்றில் தேவன் அவருக்குக் கொடுத்த அற்புத வாக்குத்தத்தங்களுக்குப் பிரதிபலனாக அவர் விசுவாசித்தாரென்று பார்க்கிறோம். ஆதி 15;5,6. சிலுவையில் கிறிஸ்து நமக்காக நிறைவேற்றியதை உணர்வதுதான் விசுவாசத்திற்கு வேராக இருக்கிறது.

***தேவனுக்குச் செலுத்தும் பிரதிபலன் விசுவாசமென்றால், விசுவாசத்தில் எதுவும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்? விசுவாசத்தின் இயல்பு என்ன? யோவான் 8:32,36; அப் 10:43; ரோமர் 1;5,8; 6:17; எபி 11:6; யாக் 2:19.***

விசுவாசம் என்பதை 'நம்பிக்கை' என்று சிலர் வரையறுக்கிறார்கள். இதில் ஒரு பிரச்சனை உள்ளது. மூலமொழியில் இரண்டுக்கும் ஒரே வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், 'நம்பு' என்பதற்கான கிரேக்க வினைச்சொல்லின் பெயர்ச்சொல் வடிவம்தான் 'விசுவாசம்'. அதாவது, 'விசுவாசம்' என்றால், 'விசுவாசம் வைத்தல்' என்று சொல்லமுடியுமா?

வேதாகமத்தை ஆராய்ந்தால், ஓர் உண்மையை நாம் கண்டுகொள்ளலாம். அதாவது, விசுவாசம் என்பது தேவனை அறிந்திருப்பது மாத்திரமல்ல; அறிந்திருப்பதை மனதார ஏற்றுக்கொள்வதுமாகும். எனவேதான், தேவனைப் பற்றி மிகச் சரியாக நாம் அறிவது முக்கியம். தேவனுடைய குணம்பற்றி தவறான கருத்து இருந்தால் விசுவாசிப்பது கடினமாகிவிடும். நற்செய்தியை அறிந்திருப்பது மாத்திரம் போதாது. ஏனெனில், அதைப் 'பிசாசுகளும்' நம்புகின்றன. உண்மையான விசுவாசம், ஒருவர் வாழும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். 'விசுவாசத்துக்குக்' கீழ்ப்படிதல் பற்றி ரோமர் 1:7 இல் பவுல் எழுதுகிறார். விசுவாசமும் கீழ்ப்படிதலும் ஒன்றுதானென்று பவுல் சொல்லவில்லை. மெய்யான விசுவாசமானது மனதில் மாத்திரமல்ல, ஒருவருடைய மொத்த வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்துமென அவர் குறிப்பிடுகிறார். ஏதோ ஒரு சில விதிகளுக்குக் கீழ்ப்படிவது அல்ல; நம் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவிடம் சரணாகதி அடைந்துவிடுவதுதான் விசுவாசம்.

'நாம் என்ன நம்புகிறோம்?' என்பது மட்டுமல்ல, 'நாம் என்ன செய்கிறோம்? எப்படி வாழ்கிறோம்' என்பதும் விசுவாசத்தில் அடங்கும்

## பாவத்தை விசுவாசம் ஊக்குவிக்கிறதா?

'விசுவாசத்தினால்மாத்திரம் நீதிமான்களாக்கப்படுவதாக பவுல் கூறிய நற்செய்தி மக்களைப் பாவஞ்செய்யத் தூண்டுகிறது' என்பது பவுலுக்கு எதிராகக் கூறப்பட்ட முக்கியக் குற்றச்சாட்டுகளில் ஒன்று. ரோமர்3:8; 6:1. 'தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டிய அவசியமில்லையென்றால், தாங்கள் வாழும் விதத்தைக்குறித்து விசுவாசிகள் கவலைப்பட மாட்டார்கள் ' என்று பவுலைக் குற்றஞ்சாட்டினவர்கள் நினைத்தார்கள். லூத்தருக்கு எதிராகவும் இதே குற்றச்சாட்டுதான் வைக்கப்பட்டது.

***விசுவாசத்தால்மாத்திரம் நீதிமானாக்கப்படுவதாக உபதேசிப்பது பாவநடத்தையை ஊக்குவிக்கிறதென்று குற்றஞ்சாட்டினவர்களுக்கு பவுலின் பதில் என்ன? கலா 2:17,18.***

---

தன்னைக் குற்றஞ்சாட்டினவர்களுக்கு பவுலின் பதில் கடுமையாக இருக்கிறது; ''தேவனே பொறுத்துக்கொள்ளும்'' என்கிறார். கிறிஸ்துவிடம் வந்தபிறகும் ஒருவன் பாவஞ்செய்ய வாய்ப்பிருக்கிறது; அதற்கு, கிறிஸ்துவைக் காரணங்காட்ட முடியாது. கட்டளையை ஒருவன் மீறினால் அவனே அதற்கு முழுப்பொறுப்பு.

***இயேசு கிறிஸ்துவோடு தனக்குள்ள ஐக்கியத்தை பவுல் எவ்வாறு விவரிக்கிறார்? அவருடைய எதிரிகள் எழுப்பின ஆட்சேபணைகளை அது எவ்வாறு கண்டிக்கிறது? கலா 2:19-21.***

'தன் எதிரிகளின் குற்றச்சாட்டு முற்றிலும் அபத்தமானது' என்கிறார் பவுல். விசுவாசத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது அரைகுறை காரியமல்ல. 'ஒருவர் வாழ்க்கையில் மெய்யான மாற்றம் ஏற்படாமல், அவரை நீதிமானாக தேவன் எண்ணுவதற்கு' அது வெறும் நடிப்பு அல்ல. மாறாக, விசுவாசத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதென்பது பூரணமான ஒரு மாற்றமாகும். அது கிறிஸ்துவோடு முற்றிலும் ஐக்கியமாவதாகும். அதாவது, அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் ஐக்கியமாவதாகும். 'நாம் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படுவதால், சுயநலத்தில் வேர்கொண்டிருந்த நம் பழைய பாவத்தன்மைகள் ஒழிந்துபோகும்' என்கிறார் பவுல். ரோமர் 6:5-14. முந்தைய வாழ்க்கையை முற்றிலுமாக அகற்றுகிறோம்; எல்லாம் புதிதாகிறது. 2கொரி 5:17. கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வுள்ளவர்களாய் உயிர்ப்பிக்கப்படுகிறோம். உயிர்த்தெழுந்த இயேசு அனுதினமும் நம்மில் வாழ்கிறார்; அவரைப்போல் நம்மை மாற்றுகிறார். எனவே, பாவம்செய்வதற்கு விசுவாசம் சாக்குப்போக்கு அல்ல. நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்ட மார்க்கத்தைவிட, கிறிஸ்துவோடு அதிக ஆழமான உறவுக்கு, அது நம்மை அழைக்கிறது.

---

'நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் அல்ல, விசுவாசத்தினால்மாத்திரமே நீதிமானாக்கப்படுகிறோம்' என்பதை எவ்வளவுக்கு ஒத்துக்கொள்கிறோம்? 'பாவம்செய்வதற்கு இது ஒரு வழியாகிவிடும்' என்று பயப்படுகிறீர்களா? அல்லது அந்த உறவில் சந்தோஷமடைகிறீர்களா? 'இரட்சிப்புபற்றி நீங்கள் எவ்வளவுக்குப் புரிந்துகொண்டுள்ளீர்கள்?' என்பதை அறிய உங்கள் பதில் எவ்வாறு உதவுகிறது?

"விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் பற்றி தவறான கருத்துகளை நாம் சபையாக நம்ப வாய்ப்புள்ள ஆபத்துபற்றி தேவன் எனக்குக் காண்பித்தார். தேவனுடைய பிரமாணம்பற்றி அதிகமாகத் தியானிக்கிறார்கள்; சபையாருக்கும் போதிக்கிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் நியாயப்பிரமாணத்தோடு அவருக்குள்ள உறவுபற்றியும் சரியாக அறியாமல் இருக்கிறார்கள். காணிக்கை செலுத்தின காயீனைப் போல்தான் அவர்களும் இருக்கிறார்கள். இருதயங்களை ஆதாயப்படுத்துவதற்குத் தவறான விதத்தில் ஊழியர்கள் பிரயாசப்படுவதாலும், இரட்சிப்புபற்றி குழப்பமான பலதரப்பட்ட கருத்துகள் சொல்லப்படுவதாலும் அநேகர் விசுவாசத்திற்குள் வராமல் இருப்பதாக எனக்குக் காண்பிக்கப்பட்டது. கிறிஸ்துவின் நீதி நமக்குரியதாக எண்ணப்படுகிறது என்றுதான் அநேக வருடங்களாக என் மனதில் உணர்த்திவருகிறார்.

"மனிதன் தன் நற்கிரியைகளால் எந்தப்புண்ணியத்தையும் சம்பாதிக்க முடியாது என்பதைவிட மக்கள் மனதில் அதிகம் பதிந்திருக்கவேண்டிய ஒரு கருத்து, எதுவும் கிடையாது. இயேசுவை விசுவாசிப்பதால்மாத்திரமே இரட்சிப்பு உண்டு" – *FW, p.18,19.*

"நியாயப்பிரமாணம் நீதியைக் கோருகிறது; எனவே, பாவி நியாயப்பிரமாணத்திற்குக் கடனாளியாகிறான்; ஆனால், அதைச் செலுத்துவதற்கு அவனுக்குத் திராணியில்லை. நீதியைப் பெறுவதற்கான ஒரேவழி விசுவாசம்தான். விசுவாசத்தால் கிறிஸ்துவின் புண்ணியங்களோடு தேவனுக்குமுன் செல்லலாம்; ஆண்டவர் தம் குமாரனின் கீழ்ப்படிதலைப் பாவியின் கணக்கில் எண்ணுவார். மனிதனுடைய தோல்விக்குப் பதிலாக கிறிஸ்துவின் நீதி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மனந்திரும்பி விசுவாசிக்கும் ஆத்துமாவை தேவன் ஏற்றுக்கொள்கிறார்; மன்னிக்கிறார்; நீதிமானாக்குகிறார்; நீதிமானாக எண்ணுகிறார்; தம் குமாரனை நேசிப்பதுபோல அவனை நேசிக்கிறார்" – *SM, p.367.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம் என்பதைவிட அதிகம் வலியுறுத்தப்படவேண்டிய வேறு கருத்து இல்லையென்று எலன் ஒய்ட் கூறுகிறார். சரியா? 'ஆம்' என்றால், அது ஏன்?*

2. *'நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே' என்று பவுல் சொல்வது ஏன்? கலா 2:21.*

**பாடச்சுருக்கம்:** *முன்பு அஞ்ஞானிகளாக இருந்தவர்கள், விருத்தசேதனம் பண்ணப்படாத பட்சத்தில் மெய்க்கிறிஸ்தவர்களாக முடியாது என்பதுபோல் அந்தியோகியாவில் பேதுரு நடந்துகொண்டார். நடவடிக்கையை அடிப்படையாக வைத்து, நீதிமானென்று யாரையும் தேவன் தீர்க்கமுடியாது. மனிதரில் சிறந்தவர்கள் கூட பூரணர்கள் அல்லர். கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்காகச் செய்தவைகளை ஏற்றுக்கொள்வதால் மாத்திரமே, அவருடைய பார்வையில் ஒரு பாவி நீதிமானாக எண்ணப்படுகிறான்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.

அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.